**சிறப்பு தனிநீதிமன்றம் (வனவழக்குகள்), நாகர்கோவில்.**
**முன்னிலை - திரு.எம்.செங்கமலசெல்வன், பி.எல்.,**
**தனி சிறப்பு நீதிபதி (வனவழக்குகள்), நாகர்கோவில்.**

**2017 ம் ஆண்டு பெப்ருவரி திங்கள் 18 ம் நாள் சனிக்கிழமை**

**ஆண்டு பட்டிகை வழக்கு எண்.1/2016**

மாநில அரசு - அழகியபாண்டியபுரம்
வனச்சரக அலுவலர் மூலமாக.
ஓ,ஆர்.நம்பர். 18/2008 . . . வாதி/குற்றம் முறையிடுபவர்

/எதிர்/

குமார், வயது 29/2008,
த/பெ.சாமுவேல்,
பிராமணங்கோணம்,
காட்டுப்புதூர் அஞ்சல், தோவாளை தாலுகா,
கன்னியாகுமரி மாவட்டம். . . . எதிரி

WEB COPY

இந்த வழக்கு என் முன்னால் முடிவான விசாரணைக்கு 18.11.2016 அன்று வந்த போது, மாநில அரசுக்காக (வனவழக்கு) சிறப்பு தனி அரசு வழக்குரைஞர் திரு.சி. செல்வகுமார் அவர்களும், எதிரிக்காக வழக்கறிஞர் திரு.ஜே.ஜெரால்டு அவர்களும் ஆஜராகியும், இருதரப்பு வழக்குரைஞர்களின் வாதங்களைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனைசெய்தும், இந்த வழக்கு இது நாள் வரை எனது பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிய

## தீர்ப்புரை

அழகியபாண்டியபுரம் வனச்சரகம், அசம்பு பாதுகாப்பு காடு, அசம்பு பீட், துவாச்சி சராகப்பகுதியில், 06.11.2008ம் தேதி மாலை 4.00 மணியளவில், இந்த எதிரியும், மற்ற நான்கு எதிரிகளும், அத்துமீறி நுழைந்து,

பச்சை தேக்கு மரம் ஒன்றையும், காய்ந்த தேக்கு மரம் ஒன்றையும், ரம்பத்தால் அறுத்து, சாய்த்து, துண்டுகளாக்கிய குற்றம் புரிந்ததாகவும், எனவே, எதிரிகள் மீது 1882ம் வருட தமிழ்நாடு வனச்சட்டம் 5ல் 21 டி, இ, எப்-ன் படி, தண்டிக்கப்படக்கூடிய குற்றம் புரிந்ததாக அழகியபாண்டியபுரம் வனசரக அலுவலர் இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. முதலில், 1ம் எதிரியாக நகோமி, 2ம் எதிரியாக பொற்கை பாண்டியன், 3ம் எதிரியாக தாஸ், 4ம் எதிரியாக இவ்வழக்கு எதிரி குமார், 5ம் எதிரியாக ராஜா ஆகியோர்களை கண்டு இந்நீதிமன்றத்தில் 'எ' படிவம் தாக்கல் செய்யப்பட்டு, ஆ.ப.வ.எண்.23/2009 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு இருந்ததில், மேற்படி 'அ' படிவம் படி, 1ம் எதிரியான நகோமிக்கு சம்மன் சார்வு செய்யப்படாத நிலையிலும், மற்ற எதிரிகளும் மற்றும் இவ்வழக்கு எதிரியான குமாரும் ஆஜராகி வந்த நிலையில், மேற்படி எதிரி நகோமி மீதான வழக்கு தனியாக பிரிக்கப்பட்டு, ஆ.ப.வ.எண்.45/2010ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அதன்பிறகு 05.10.2010ம் தேதி, வாதியின் வருகை இன்மைக்காக எதிரி நகோமி மீதான வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

WEBCOPY

3. அதன்பிறகு மேற்படி இந்த எதிரி உள்ளிட்ட நான்கு எதிரிகளுக்கு நகல்கள் வழங்கப்பட்டு, சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, எதிரிகள் மீது குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு, வாதி தரப்பில் நான்கு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, ஐந்து சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, நான்கு சான்று பொருட்கள் குறியீடு செய்யப்பட்டு, வாதி தரப்பில் மேலும் சாட்சிகள் இல்லையென்று தெரிவித்ததன் பேரில், வாதி தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் அடிப்படையில், இருதரப்பு வாதங்களைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இந்த எதிரி உள்ளிட்ட எதிரிகள் இந்த நீதிமன்றத்தால் விசாரணை செய்து தண்டிக்கப்படக்கூடிய குற்றம் புரிந்ததாக அநுமானிக்க

போதுமான காரணங்கள் இருந்த படியால், இந்த எதிரி உள்ளிட்ட மேற்படி எதிரிகள் மீது 1882ம் வருட தமிழ்நாடு வனச்சட்டம் 5ல் 21 டி, இ, எப் ன் படியும் தண்டிக்கப்படக்கூடிய குற்றம் புரிந்துள்ளதாக குற்றச்சாட்டுகள் வனைந்து, இவ்வழக்கு எதிரி மற்றும் மேற்படி எதிரிகளுக்கு விளக்கி சொல்லி கேட்ட போது, எதிரி குற்றச்சாட்டுகளை மறுத்து, வாதி தரப்பு சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்ய வேண்டுமென்றார்கள்.

4. அதன்படி சாட்சிகளின் குறுக்கு விசாரணைக்காக நிலுவையில் இருந்த நிலையில், மேற்படி எதிரிகளில் பொற்கைபாண்டியன் மற்றும் இவ்வழக்கு எதிரி ஆகியோர் மீது பிடிக்கட்டளை ஏற்பட்டு, நீண்ட நாட்களாக நிலுவையில் இருந்த நிலையில், அவர்கள் மீதான வழக்கு ஆ.ப.வ.எண்.1/2016 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, நிலுவையில் இருந்து வந்தது. இவ்வாறான நிலையில், ஆ.ப.வ.எண்.23/2009 எதிரிகளான தாஸ், ராஜா மீது மட்டும், வழக்கின் மேல்நடவடிக்கை தொடரப்பட்டு வந்த நிலையில், எதிரி பொற்கை பாண்டியன் ஆ.ப.வ.எண்.1/2016ல் ஆஜராகி, அவர் மீதான பிடிக்கட்டளையை ரத்து செய்ய மனு தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டு, அதன்பிறகு அவர் மீதான வழக்கை ஆ.ப.வ.எண்.23/2009 சேர்த்து, மேல்நடவடிக்கை தொடர வேண்டுமென்று மனு தாக்கல் செய்யப்பட்டதன் பேரில், மேற்படியார் மீதான வழக்கு ஆ.ப.வ.23/2009 சேர்க்கப்பட்டு, பொற்கை பாண்டியன், ஆ.ப.வ.எண்.23/2009 வழக்கில் 1ம் எதிரியாக சேர்க்கப்பட்டார்.

WEB COPY

5. இவ்வழக்கு எதிரி குமார் மீதான வழக்கு ஆ.ப.வ.எண்.1/2016 ஆக தற்போதும் நிலுவையில் இருந்து வந்த நிலையில், எதிரி பிடிகட்டளை மூலம் ஆஜர்படுத்தப்பட்டு, நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார். இவ்வாறான நிலையில், எதிரி தரப்பில், ஆ.ப.வ.எண்.23/2009 வழக்கில் உள்ள சாட்சியம் மற்றும் சான்று ஆவணங்களையே இவ்வழக்கில் எடுத்துக்கொள்ள

வேண்டுமென்று மனு தாக்கல் செய்யப்பட்டு, அந்த மனு ப.வ.கு.ம.எண்.72/ 2017 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு விசாரணைக்கு பிறகு அனுமதிக்கப்பட்டதன் பேரில், ஆ.ப.வ.எண்.23/2009ன் சாட்சிகளும், சான்றாவணங்களும் இவ்வழக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டன. அந்த வகையில், மேற்படி ஆ.ப.வ.எண்.23/2009ல் விசாரிக்கப்பட்ட வா.சா.1 முதல் 4 வரையான சாட்சிகளின் சாட்சியங்களையும், குறியீடு செய்யப்பட்ட ஐந்து சான்றாவணங்களையும், மற்றும் குறியீடு செய்யப்பட்ட நான்கு சான்று பொருட்களையும் இவ்வழக்கில் சாட்சியமாக எடுத்துக்கொள்ளப்பட்டது.

**<u>6. வாதி தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம் -</u>**

WEB COPY

புகார்தாரர் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களின் படி, வாதி தரப்பு சாட்சிகள், அழகியபாண்டியபுரம் வனச்சரகம், அசம்பு பாதுகாப்பு காடு, அசம்பு பீட், துவாச்சி சராகப்பகுதியில், 06.11.2008ம் தேதி மாலை 4.00 மணியளவில், இந்த எதிரிகளும், மற்ற இரண்டு எதிரிகளும், அத்துமீறி நுழைந்து, ஒரு பச்சை தேக்கு மரம் ஒன்றை வெட்டிக்கொண்டு இருந்ததாகவும், சாட்சிகளை கண்டவுடன் ஓடிவிட்டதாகவும், அவர்களை பிடிக்க முடியவில்லை என்றும், சம்பவ இடத்தை தணிக்கை செய்த போது, ஒரு பச்சை தேக்கு மரத்துண்டும், இருபக்கமும் கைப்பிடி உள்ள வாளும் எச் நமூனா தயார் செய்து, அதன் மூலம் கைப்பற்றப்பட்டதாகவும், குத்தி மூட்டு அறிக்கை தயார் செய்யப்பட்டதாகவும், பின்னர் 10.11.2008ம் தேதி மீண்டும் அந்த இடத்தை தணிக்கை செய்த போது, 10 தேக்கு கட்டைகளை படிவம் 95 மூலம் கைப்பற்றியதாகவும், அதன்பிறகு பிடிபொருட்கள், ஆவணங்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியதாகவும், அதன்பிறகு எதிரிகள் மீது எ படிவம் தாக்கல் செய்யப்பட்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்கள்.

7. புகார்தாரர் தரப்பில் விசாரணை செய்த சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து, எதிரிகளுக்கு பாதகமாக தோன்றுகிற விபரங்கள் அனைத்தையும் அவர்களுக்கு நேர்முகமாக விளக்கியும், வழக்கை பொறுத்த மட்டில் பொதுவாகவும், கு.வி.மு.ச.பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் விசாரிக்கப்பட்ட போது, வாதி தரப்பு சாட்சிகள் பொய் என்றும், அவர்கள் தரப்பு விசாரிக்க சாட்சி இல்லை என்று சொல்லி, எதிரி தரப்பு வழக்கறிஞர் 'எ' படிவத்தில் குறிப்பு எழுதியுள்ளார்.

8. இந்த வழக்கில் எதிரி மீது வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை வாதி தரப்பில் தகுநிலை ஐயப்பாட்டிற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே தீர்வுக்குரிய பிரச்சனையாகும்.

WEB COPY

9. புகார்தாரர் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களின் படி, வாதி தரப்பு சாட்சிகள், அழகியபாண்டியபுரம் வனச்சரகம், அசம்பு பாதுகாப்பு காடு, அசம்பு பீட், துவாச்சி சராகப்பகுதியில், 06.11.2008ம் தேதி மாலை 4.00 மணியளவில், இந்த எதிரிகளும், மற்ற இரண்டு எதிரிகளும், அத்துமீறி நுழைந்து, ஒரு பச்சை தேக்கு மரம் ஒன்றை வெட்டிக்கொண்டு இருந்ததாகவும், சாட்சிகளை கண்டவுடன் ஓடிவிட்டதாகவும், அவர்களை பிடிக்க முடியவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்கள்.

10. இவ்வழக்கில், வாதி தரப்பில் 4 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு உள்ளார்கள். இருந்த போதிலும், எதிரிகள் தரப்பில், அவர்களை குறுக்கு விசாரணை செய்ய வேண்டுமென்று கேட்டு, சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டு, வா.சா.1 மற்றும் 2 தான் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்கள். ஆனால், வா.சா.3 மற்றும் 4 சாட்சிகளை ஆஜர்படுத்த வாதி தரப்புக்கு பலமுறை சம்மன் அனுப்பியும், போதிய கால

அவகாசம் கொடுத்தும், ஆஜர்படுத்தாத காரணத்தாலும், விரைவான நீதி வழங்க வேண்டுமென்பதாலும், மேலும், D.F.Philips /Vs./ Damayanthi Kailasam & Others, CDJ 2010 MHC 1572, என்ற தீர்ப்பினை பரிசீலித்த வகையிலும், மேற்படியாரின் முதல்நிலை சாட்சியத்தை நீக்கறவு (Eschew) செய்ய வேண்டியதில்லை என்றும், மேற்படியார்கள் முதல்நிலை விசாரணையிலேயே எதிரிக்கு சாதகமாக சாட்சியம் அளிக்க வாய்ப்புள்ள நிலையிலும், மேற்படியாரின் சாட்சியங்கள், சாட்சியத்தின் தன்மை மற்றும் நம்பகத்தன்மை ஆகியவைகளை தீர்ப்பின் போது பரிசீலிக்கப்படும் என்ற வகையில், மேற்படியார்களின் சாட்சியம் முடிக்கப்பட்டது. அந்த வகையில், மேற்படி சாட்சிகள் குறுக்கு விசாரணை செய்யப்படாத நிலையில், அவர்களுடைய முதல்நிலை சாட்சியத்தை முழுவதுமாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது ஏற்றுக்கொள்ளும்படியாக இல்லை.

WEB COPY

11. இவ்வாறான நிலையில், எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், அவர்களது வாதத்தின் போது, வாதிதரப்பு சாட்சிகள் மாலை 4.30 மணிக்கு தணிக்கைக்கு சென்றதாக சொல்லும் நிலையில், ஆனால் சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்தில் செல்லும் போது இருட்டிவிட்டது என்றும், அதனால் எதிரியை பார்க்க முடியவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ள நிலையிலும், எதிரியை பிடிக்க முடியவில்லை என்று சாட்சியம் அளித்துள்ள நிலையிலும், எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டதாக சாட்சியங்கள் இல்லாத நிலையிலும், இவ்வழக்கில் எதிரியை எவ்வாறு தீர்மானித்தார் என்பதற்கு, வாதி தரப்பில் விளக்கம் இல்லை என்றும், அந்த வகையில் வாதி தரப்பு வழக்கு நிரூபிக்கப்படவில்லை என்றும் வாதிடப்பட்டது.

12. அந்த வகையில், வா.சா.1 ஆன ஆனந்தராஜ் மற்றும் வா.சா.2 ஆன மாணிக்க வாசகம், ஆகியோரின் குறுக்கு விசாரணையை கவனமுடன்

பரிசீலித்த வகையில், எதிரியை எவ்வளவு தூரத்தில், எந்த திசையில் முதலில் பார்த்தீர்கள் என்று கேட்ட போது, இருட்டிவிட்டதால் பார்க்க முடியவில்லை என்று தான் சாட்சியம் அளித்துள்ளார்கள். எனவே, எதிரி தரப்பில் வாதிடுவது போல், சாட்சிகள் அவர்களது சாட்சியத்தில், இருட்டிவிட்டதால், எதிரியை பார்க்க முடியவில்லை என்று சாட்சியம் அளித்துள்ள நிலையிலும், எதிரியை எவ்வளவு தூரத்தில் பார்த்ததாக கூட சாட்சியங்கள் இல்லாத நிலையிலும், பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிக்குள், இரவு நேரங்களில் எதிரியை பார்த்ததாக சொல்வது நம்பும்படியாக இல்லை.

13. மேலும், அதன்பிறகு எதிரியை கைது செய்யவும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்ததாக வாதி தரப்பில் சாட்சியங்கள் இல்லை. மேலும், வாதி தரப்பு சாட்சிகள், அவர்களது சாட்சியத்தில், எதிரி தப்பி ஓடிவிட்டதால், அவர்களிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்படவில்லை என்று தான் சாட்சியம் அளித்துள்ளார்கள். இவ்வாறான நிலையில், இவ்வழக்கு எதிரி தான், சம்பவ இடத்தில், பச்சை தேக்குமரம் ஒன்றை வெட்டியதாக சொல்வது, வாதி தரப்பில் நிரூபிக்கப்படவில்லை.

WEB COPY

14. மேலும், வா.சா.1 முதல் வா.சா.4 வரையிலான சாட்சிகளை பரிசீலித்த வகையிலும், எச் நமூனா, குத்தி மூட்டு அறிக்கை, படிவம் 95 ஆகியவைகளை 06.01.2008ம் தேதி தணிக்கைக்கு சென்றிருந்த போது, சம்பவ நடந்ததாக சொல்லும் இடத்தில் வைத்து தயாரித்ததாக சொல்லும் நிலையில், ஆனால் வா.சா.1 ஆனந்த ராஜ், அவரது குறுக்கு விசாரணையில், தடிகளை கைப்பற்றிவிட்டு அலுவலகம் வரும்போது, இரவு 8.00 மணி இருக்குமென்றும், வனச்சரக அலுவலகம் வந்த பிறகு தான், ஜார்ஜ் பெஞ்சமின் அவர்கள், வா.சா.1ஐயும், அவருடன் வந்தவர்களையும் விசாரித்து எழுதிக் கொண்டதாகவும், என்ன நடந்தது என்று வா.சா.1ம் மற்றவர்களும் அவரிடம்

சொன்னதாகவும், அதை வைத்து, பெஞ்சமின் படிவம் 95 தயார் செய்தகவும், அலுவலகத்தில் வைத்து தயார் செய்த ஆவணங்களில், அவரிடம் சாட்சி கையெழுத்து வாங்கியதாக சாட்சியம் அளித்துள்ளார்.

15. மேலும், வா.சா.2 மாணிக்கவாசகம், அவரது சாட்சியத்தின் போது, குறுக்கு விசாரணையில், வனச்சரக அலுவலர் 6ம் தேதி இருட்டு என்பதால், எந்த ஆவணமும் தயார் செய்யவில்லை என்று தான் சாட்சியம் அளித்துள்ளார். மேலும், வா.சா.ஆ.1 எச் நமூனாவில் அது தயார் செய்யப்பட்ட தேதி 05.01.2008 என்று எழுதப்பட்டு, 5ம் தேதி 6ம் தேதி என திருத்தப்பட்டுள்ளது. மேலும், வா.சா.ஆ.2 ஆன குத்திமூட்டு அறிக்கை மற்றும் வா.சா.ஆ.5 ஆன படிவம் 95 ஆகியவைகள் 06.11.2008ல் தயார் செய்யப்பட்டதாக உள்ளது.

WEB COPY

16. எனவே, எதிரி தரப்பில் வாதிடுவது போல், 06.01.2008ம் தேதி, வாதி தரப்பு சாட்சிகள் சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்தில் எச் நமூனா, குத்திமூட்டு அறிக்கை, படிவம் 95 தயார் செய்ததாக சொல்வது நம்பும்படியாக இல்லை என்றும், அந்த வகையில், வாதிகள் மேற்படி சங்கதிகளை குறித்து நிரூபிக்கப்படவில்லை என்பது, நாம் மேலே ஆராய்ந்த வகையில் ஏற்றுக்கொள்ளும்படியாக உள்ளது.

16. மேலும், வாதி தரப்பு சாட்சிகள், 06.01.2008க்கு பிறகு, மீண்டும் 10.11.2008 அன்று சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்தை தணிக்கை செய்ததாகவும், அப்போது, புதர் ஓரத்தில் 10 தேக்கு தடிகள் மறைத்து வைக்கப்பட்டிருந்ததை கண்டுபிடிக்கப்பட்டதாகவும், அதையும் படிவம் 95 மூலம் கைப்பற்றியதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்கள். ஆனால், வா.சா.2 அவரது குறுக்கு விசாரணையில், 10ம் தேதி கைப்பற்றப்பட்டதாக சொல்லும் தடிகளுக்குரிய எச் நமூனா, குத்தி மூட்டு அறிக்கை தயார் செய்யவில்லை

என்றும், அன்றைய தினம் எந்த ஆவணமும் தயார் செய்யவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்கள்.

17. எனவே, எதிரி தரப்பில் வாதிடுவது போல், 10ம் தேதியும் சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்தில் வைத்து, எந்த ஆவணமும் தயார் செய்யப்படவில்லை என்று சொல்லியுள்ள நிலையில், ஆனால் அன்றைய தினம் வா.சா.ஆ.4 ஆன படிவம் 95ஐ தயார் செய்ததாக சாட்சியம் அளித்துள்ள நிலையில், மேற்படி சங்கதி குறித்து, வாதி தரப்பு சாட்சியங்கள் சந்தேகம் வருவதாக உள்ளது என்பதும், அந்த வகையில், வாதி தரப்பு வழக்கு நிரூபிக்கப்படவில்லை என்பதும் ஏற்றுக்கொள்ளும்படியாக உள்ளது.

WEB COPY

18. மேலும், வாதி தரப்பு சாட்சியங்கள் படியும், குத்தி மூட்டு அறிக்கை படியும், வா.சா.ஆ.4 மற்றும் 5 ஆன படிவம் 95 படியும், அதில் கண்ட இவ்வழக்குச் சொத்துக்கள் கைப்பற்றப்பட்டதாக வைத்துக் கொண்டாலும், அந்த தேக்குத்தடிகளுக்கும், இந்த எதிரிக்கும் சம்பந்தம் இருப்பதாகவோ, அல்லது அவைகளை இந்த எதிரி தான் வெட்டினார் என்பதற்கோ, வாதி தரப்பில் எவ்விதமான சாட்சிகளும் இல்லாத நிலையில், மேற்படி ஆவணங்களின் அடிப்படையில் மட்டும், எதிரி மீதான குற்றச்செயல்கள் நிரூபிக்கப்பட்டுள்ளது என்பது ஏற்றுக்கொள்ளும்படியாக இல்லை.

19. மேலும், எதிரி தரப்பில் வாதிடுவது போல், இவ்வழக்கு எதிரிகளோடு சேர்த்து, மொத்தம் 5 எதிரிகள் இருந்ததாக சொல்லும் நிலையில், எந்தெந்த எதிரிகள், கைப்பற்றப்பட்டதாக சொல்லும் வாளை வைத்து அறுத்து கொண்டு இருந்தார்கள் என்பதற்கும், வாதி தரப்பில் சாட்சிகள் இல்லை என்று வாதிடுவது, வாதி தரப்பு சாட்சிகளை பரிசீலித்த வகையில் ஏற்றுக்கொள்ளும்படியாக உள்ளது. ஏனெனில், ஐந்து எதிரிகள் இருந்ததாக சொல்லும் நிலையில், கைப்பற்றப்பட்டதாக சொல்லும் வாள், இருபக்கமும்

கைப்பிடியுள்ள வாளாக உள்ள பட்சத்தில், இரண்டு எதிரிகள் தான் அதை பயன்படுத்த முடியும். அவ்வாறு எந்தெந்த எதிரிகள் மேற்படி வாளை பயன்படுத்தினார்கள் என்பதற்கு சாட்சியங்கள் இல்லை. அந்த வகையில், வாதி தரப்பு வழக்கு நிரூபிக்கப்படவில்லை.

20. மேலும், வனவழக்குகளைப் பொறுத்த வரையில், வாதி தரப்பில் தான் அவர்களது வழக்கை ஆரம்ப நிலையில் (Initial Burden) நிரூபிக்க கடமைப்பட்டவர் என்றும், அதன் பிறகு தான் எதிரி அவர் மீதான குற்றச்சாட்டை மறுத்து, அவர்களது வழக்கை நிரூபிக்க கடமைப்பட்டவர்கள் என்றும், ஆனால் இவ்வழக்கில், வாதி தரப்பில் அவர்களது வழக்கை ஆரம்ப நிலையிலேயே நிரூபிக்க தவறிவிட்டனர் என்று எதிரி தரப்பில் வாதிடுவது, நாம் மேலே ஆராய்ந்த வகையில் ஏற்றுக்கொள்ளும்படியாக உள்ளது. எனவே, நாம் மேலே ஆராய்ந்த வகையில், வாதி தரப்பில் எதிரி மீதான குற்றச்சாட்டுகளை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்க தவறிவிட்டனர் என்றும் இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

WEB COPY

முடிவில், எதிரியை 1882ம் வருட சட்டம் 5 பிரிவு 21(டி)(இ)(எப்) ன் படி குற்றவாளிகள் அல்ல என தீர்மானித்து, எதிரியை கு.வி.மு.ச. 248(1) பிரிவின் கீழ் விடுதலை செய்து தீர்ப்பு வழங்கப்படுகிறது.

இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.4ல் சா.பொ.1ல் கண்ட பத்து தேக்கு கட்டைகளையும் மற்றும் வா.சா.ஆ.5 ஆன படிவம் 95ல் சா.பொ.2 மற்றும் 3ல் கண்ட இரண்டு பச்சை தேக்கு உருட்டுக்கட்டைகளையும் மேல்முறையீடு முடிந்த பிறகோ அல்லது மேல்முறையீட்டு காலம் முடிந்த பிறகு அரசுக்கு ஆதாயப்படுத்தவும், வா.சா.ஆ.5ல் கண்ட சா.பொ.4 ஆன இருப்பக்கமும் கைப்பிடியுள்ள வாளை மேல்முறையீடு முடிந்த பிறகோ

அல்லது மேல்முறையீட்டு காலம் முடிந்த பிறகு அழிக்கவும் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்பு என்னால் தட்டச்சரிடம் நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின்பு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2017ம் ஆண்டு பெப்ருவரி திங்கள் 18ம் நாள் சனிக்கிழமை என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**ஒம்/- செங்கமலசெல்வன்**

**தனி சிறப்பு நீதிபதி (வனவழக்குகள்)**
**நாகர்கோவில்**

**பின்னிணைப்பு**

WEB COPY

**வாதி தரப்பு சாட்சிகள்**

வா.சா.1. திரு.ஆனந்தராஜ், வனவர்

வா.சா.2 திரு.மாணிக்கவாசகம், வனக்காப்பாளர்

வா.சா.3 திரு.சாமுவேல் ராஜ்குமார் கங்கா, வனச்சரக அலுவலர்

வா.சா.4. திரு.ஜார்ஜ் பெஞ்சமின், வனச்சரக அலுவலர்

**வாதி தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1. | 06.01.2008 | 'எச்' நமூனா |
| வா.சா.ஆ.2 | 06.11.2008 | குத்திமூட்டு அறிக்கை |
| வா.சா.ஆ.3 | 06.01.2008 | வனக்குற்ற அறிக்கை |
| வா.சா.ஆ.4 | 10.11.2008 | படிவம் 95 |
| வா.சா.ஆ.5 | 06.11.2008 | படிவம் 95 |

<u>வாதி தரப்பு சான்று பொருட்கள்</u>

சா.பொ.1 வா.சா.ஆ.4ல் கண்ட 1 முதல் 10 வரையான தேக்கு தடிகள்.

சா.பொ.2 வா.சா.ஆ.5ல் கண்ட பச்சை தேக்கு உருட்டுக்கட்டை.

சா.பொ.3 வா.சா.ஆ.5ல் கண்ட படுகை தேக்கு உருட்டுக்கட்டை.

சா.பொ.4 வா.சா.ஆ.5ல் கண்ட இருப்பக்கமும் கைப்பிடியுள்ள வாள்.

**ஒம்/- செங்கமலசெல்வன்**

**தனி சிறப்பு நீதிபதி (வனவழக்குகள்)**
**நாகர்கோவில்**

WEB COPY

**தனி சிறப்பு நீதிபதி (வனவழக்குகள்),**
**நாகர்கோவில்,**
**ஆண்டு பட்டிகை வழக்கு எண்.1/2016**
**வரைவு / நேரிய தீர்ப்பு**
**நாள் - 18.02.2017**